www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

Tsi9T

**தென்காசி மாவட்டம்**

**அரையாண்டு பொதுத் தேர்வு, டிசம்பர் - 2024**

09-12-2024

**வகுப்பு 9**

**தமிழ்**

கால அளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 100

குறிப்பு: 1) இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது

2) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

**பகுதி - I (மதிப்பெண்கள் 15)**

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் எழுதுக.** **15×1=15**

1) தமிழ்விடு தூது ............ என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது

அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை

இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

2) அழியா வனப்பு, ஒழியா வனப்பு, சிந்தாமணி - அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக் குறிப்பு

அ) வேற்றுமைத் தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

இ) பண்புத் தொகை ஈ) வினைத்தொகை

3) 'மிசை' என்பதன் எதிர்ச்சொல் என்ன?

அ) கீழே ஆ) மேலே இ) இசை ஈ) வசை

4) இராவண காவியம் ஆசிரியர் ...............

அ) கண்ணதாசன் ஆ) சுரதா இ) புலவர் குழந்தை ஈ) பாரதியார்

5) ஐம்பெருங்குழு, எண்பேராயம் -சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம் -----

அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள்

இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச் சொற்கள்

6) தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?

அ) தேசிய திறனறித் தேர்வு

ஆ) ஊரகத் திறனறித் தேர்வு

இ) தேசிய திறனறி, கல்வி உதவித் தொகை தேர்வு

ஈ) மூன்றும் சரி

7) பொருத்தமான விடையைத் தேர்க:

அ) சிறுபஞ்சமூலம் - 1) காப்பிய இலக்கியம்

ஆ) குடும்ப விளக்கு - 2) சங்க இலக்கியம்

இ) சீவக சிந்தாமணி - 3) அற இலக்கியம்

ஈ) குறுந்தொகை - 4) தற்கால இலக்கியம்

அ) அ-3, ஆ-4, இ-1, ஈ-2 ஆ) அ-2, ஆ-3, இ-1, ஈ-4

இ) அ-3, ஆ-1, இ-4, ஈ-2 ஈ) அ-4, ஆ-1, இ-2, ஈ-3

8) சரியான கூற்றினைத் தெரிவு செய்க:

அ) 'ஆ' என்பது எதிர்மறை இடைநிலை

ஆ) வீட்டிற்கோர் புத்தகசாலை என்பது அண்ணாவின் மேடைப்பேச்சு

இ) வில்லுப்பாட்டு ஓர் இலக்கிய வடிவம்

அ) ஆ, இ-சரி, அ-தவறு ஆ) அ,இ-சரி, ஆ-தவறு

இ) மூன்றும் சரி ஈ) மூன்றும் தவறு

9) *விடை வரிசையைத் தேர்க:*

க. இது செயற்கைக்கோள் ஏவுஊர்தியின் செயல்பாட்டை முன்கூட்டியே கணிக்கும்

உ. இது கடல்பயணத்துக்காக உருவாக்கப்பட்ட செயலி

அ) நேவிக், சித்தாரா ஆ) நேவிக், வானூர்தி

இ) வானூர்தி, சித்தாரா ஈ) சித்தாரா, நேவிக்

10) 'பொதுவர்கள் பொலிஉறப் போர்அ டித்திடும்' நிலப்பகுதி -----

அ) குறிஞ்சி ஆ) நெய்தல் இ) முல்லை ஈ) பாலை

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

11) திருநாதர்குன்றில் ஒரு பாறையில் புடைப்புச் சிற்பங்களாக உள்ளவை -----

அ) விலங்கு உருவங்கள் ஆ) தீர்த்தங்கரர் உருவங்கள்

இ) தெய்வ உருவங்கள் ஈ) நாட்டியம் ஆடும் பாவை உருவங்கள்

**பாடலைப் படித்துப் பின்வரும் (12, 13, 14, 15) வினாக்களுக்கு விடை தருக.**

சொல்அரும் சூல்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருஇருந்து ஈன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்த நூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே

12) இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?

அ) பெரிய புராணம் ஆ) சீவக சிந்தாமணி

இ) புறநானூறு ஈ) சிலப்பதிகாரம்

13) இப்பாடலில் ஆசிரியர் யார்?

அ) சீத்தலைச் சாத்தனார் ஆ) குடபுலவியனார்

அ) திருத்தக்க தேவர் ஈ) இளங்கோவடிகள்

14) இப்பாடலில் இடம்பெற்றுள் அடி எதுகைகளை எழுதுக.

அ) சொல்அரும் - தோற்றம் போல் ஆ) மெல்லவே - ஈன்று

இ) மெல்லவே - செல்வமே ஈ) கல்விசேர் - காய்த்தவே

15) 'இறைஞ்சி' என்பதன் இலக்கணக்குறிப்பு யாது?

அ) பெயரெச்சம் ஆ) வினையெச்சம்

இ) பண்புத்தொகை ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

## பகுதி - II (மதிப்பெண்கள் 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும். 4×2=8**
**21வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

16) விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க

அ) பள்ளிக்கல்வியை முடித்த மாணவர்கள் கல்லூரிகளுக்கு இணையம் வழியாக விண்ணப்பிக்கலாம்

ஆ) பல்லவர் காலத்தில் சுதையினாலும் கருங்கற்களினாலும் சிற்பங்கள் அமைக்கப்பட்டன

17) கண்ணி என்பதன் விளக்கம் யாது?

18) ஏறுதழுவுதல் நிகழ்விற்கு இலக்கியங்கள் காட்டும் வேறுபெயர்களைக் குறிப்பிடுக.

19) நடுகல் என்றால் என்ன?

20) உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே - குறிப்புத் தருக.

21) 'விடல்' என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும். 5×2=10**

22) **அடைப்புக்குள் உள்ள சொற்களைப் பொருத்தமான வினைமுற்றாக மாற்றி கோடிட்ட இடங்களில் எழுதுக.**

அ) இந்திய மொழிகளின் மூலமும் வேருமாகத் தமிழ் ............ (திகழ்)

ஆ) வைதேகி நாளை நடைபெறும் கவியரங்கில் ............ (கலந்து கொள்)

23) வீணையோடு வந்தாள், கிளியே பேசு - தொடரின் வகையைச் சுட்டுக

24) மரபு இணைச்சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக:

அ) நகமும் சதையும் ஆ) கண்ணும் கருத்தும்

25) **கலைச்சொற்கள் தருக:**

அ) Comparative grammar

ஆ) Electronic devices

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



26) மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக:

அ) கயல் பானை செய்யக் கற்றுக்கொண்டாள்

ஆ) நேற்று தென்றல் காற்று அடித்தது

27) தொடரைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க:

அ) இளமையில் கல்வி -----

ஆ) கல்லாடம் படித்தவரோடு -----

28) 'உணர்ந்த' பகுபத உறுப்பிலக்கணம் தருக.

## பகுதி - III (மதிப்பெண்கள் 18)

### பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க. 2×3=6

29) சோழர்கால குமிழித்தூம்பு எதற்காகப் பயன்படுத்தப்பட்டது?

30) மருத்துவர் முத்துலெட்சுமியின் சாதனைகளைக் குறிப்பிடுக.

31) உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடைதருக.

நாம் வாழும் தமிழ்நாடு 'வெப்பமண்டலப் பகுதியில் உள்ளது. எனவே, நீர் சார்ந்த தன்னுணர்ச்சி தமிழக மக்களுக்கு மிகுதி, 'தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதே' என்பது சொல் வழக்கு. தமிழ் மரபில் 'நீரும் நீராடலும் வாழ்வியலோடு பிணைக்கப்பட்டவையாக விளங்குகின்றன' என்பார் பேராசிரியர் தொ.பரமசிவன். அவர் 'குளித்தல்' என்ற சொல்லைக் குறித்துக் கூறும் கருத்துகள் நமக்குப் புதிய சிந்தனைகளைத் தருகின்றன.

அ) நாம் வாழும் தமிழ்நாடு எந்தப்பகுதியில் உள்ளது?

ஆ) நீர்குறித்த சொல்வழக்கை எழுதுக.

இ) தமிழ் மரபில் நீர் குறித்த பேராசிரியர் தொ.பரமசிவன் அவர்களின் கருத்து யாது?

### பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.
34.ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்: 2×3=6

32) 'என் சமகாலத் தோழர்களே' கவிதையில் கவிஞர் விடுக்கும் வேண்டுகோள் யாது?

33) 'மாகால் எடுத்த முந்நீர் போல' இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

34) அடிபிறழாமல் எழுதுக:

"ஒன்றறி வதுவே" எனத் தொடங்கும் தொல்காப்பியப் பாடல்

(அல்லது)

'அள்ளல்' எனத் தொடங்கும் முத்தொள்ளாயிரப் பாடல்

### பிரிவு - 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க. 2×3=6

35) தன்வினை, பிறவினை - எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.

36) வல்லினம் இட்டும் நீக்கியும் எழுதுவதன் இன்றியமையாமையை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

37) தற்குறிப்பேற்ற அணியை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

## பகுதி - IV (மதிப்பெண்கள் 25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க: 5×5=25

38) அ) தூது அனுப்பத் தமிழே சிறந்தது என்பதற்குத் தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

(அல்லது)

ஆ) இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த இயற்கை எழில்காட்சிளை விவரிக்க.

39) அ) உங்களின் நண்பர், பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணனின் 'கால் முளைத்த கதைகள்' என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

(அல்லது)

ஆ) உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ்-தமிழ்-ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதிகள் பத்துப்படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

40) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.

[illegible],
[illegible],
[illegible],
உள்ளம்-627809
தென்காசி மாவட்டம்



41) அ) விளம்பரத்தைச் செய்தித்தாள் செய்தியாக மாற்றி அமைக்க

புத்தகம் படிப்போம்! **புத்தகத் திருவிழா** புதியன அறிவோம்!

நாள் - செப்டம்பர் 19 முதல் 28 வரை

இடம் - சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

நேரம் - காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை.

(முதல்நாள் காலை 9 மணிக்குத் தமிழகக் கல்வி அமைச்சர் தொடங்கி வைக்கிறார்.)

(நாள்தோறும் மாலை 6 மணிக்குப் புதிய புத்தகங்கள் வெளியீடும் சிறப்புப் பேச்சாளர்களின் உரையும் இடம்பெறும்.)

அனைவரும் வாரீர்! அறிவுத்திறம் பெறுவீர்!

42) அ) **என்னை மகிழச்செய்த பணிகள் (எ.கா.)**
இக்கட்டான நேரத்தில் தம்பிக்கு உதவியதற்காக அப்பாவிடம் பாராட்டுப் பெற்றேன். எனது வகுப்பறையில் கரும்பலகையின் கீழ்சிதறிக்கிடந்த சுண்ணக்கட்டித் துண்டுகளைத் திரட்டி எடுத்துக் குப்பைத் தொட்டியில் போட்டதற்கு ஆசிரியர் மற்றும் வகுப்புத் தோழர்களிடம் கைத்தட்டல் பெற்றேன்.

1. ________ 2. ________ 3. ________
4. ________ 5. ________

**(அல்லது)**

ஆ) **பொன்மொழிகளை மொழிபெயர்க்க**

1. A nation's culture resides in the hearts and in the soul of its people – Mahatma Gandhi
2. The art of people is a true mirror to their minds – Jawaharlal Nehru
3. The biggest problem is the lack of love and charity – Mother Teresa
4. You have to dream before your dreams can come true – A.P.J. Abdul Kalam
5. Winners don't do different things; they do things differently – Shiv Khera

**பகுதி - V (மதிப்பெண்கள் 24)**

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்க:** **3×8=24**

43) அ) ஏறுதழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) இந்தியதேசிய இராணுவத்தின் தூண்களாகத் திகழ்ந்தவர்கள் தமிழர்கள் என்பதைக் கட்டுரைவழி நிறுவுக.

44) அ) 'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

**(அல்லது)**

ஆ) இந்திய விண்வெளித் துறை பற்றிய செய்திகளை விவரிக்க

45) அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.
முன்னுரை - கல்வியின் முக்கியத்துவம் - பெண்கல்வியின் அவசியம் - பெண்கல்வியின் பயன்கள் - சமூக மாற்றம் - சாதனைப் பெண்கள் - முடிவுரை.

**(அல்லது)**

ஆ) 'எனது பயணம்' என்னும் தலைப்பில் உங்களின் பயண அனுபவங்களை வருணித்து எழுதுக.

- - - - - - -

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com